**O.S.No. 194/2020**

**Date 03.07.2025**

**வா.சா.1 ஜோதி அய்யப்பன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு தாக்கல் செய்தவதற்கு முன்னர் மாவட்ட ஆட்சி தலைவருக்கும், கோட்டாட்சியருக்கோ புகார் தாவா சொத்து சம்பந்தமாக புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். UDR ல் எனது பெயரைசேர்க்க கால அவகாசம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் இருக்கிற கட்டிடத்திற்கு உரிய அனுமதி பெற்று தான் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து அரசாங்க ஆவணத்தின் படி சர்க்கார் புறம்போக்கு என்றும், தரிசு நில வகை பாடு என்று உள்ளது என்றால் சரியல்ல. எனது பெயரில் வகைபாடு செய்யப்பட்ட இடம் அரசாங்கத்தினை கட்டுப்படுத்தக்கூடியதில்லை என கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஆதியில் கிணறு உள்ளதாக கூறுவதும், அருகாமையில் முத்தையாபிள்ளை தகப்பனாரின் சமாதி இருப்பதாக கூறுவது உண்மையல்ல என்றாலும் மேற்படி கட்டிடத்தை புதுப்பித்து கட்டியதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக வருவாய் கோட்டாட் சியருக்கும் எந்த வித புகாரும் அளிக்கவில்லை என்றாலும் நான் எழுத்து பூர்வமாக ஆட்சேபனை கேட்டதாகவும், அதற்கு அவர்கள் தரமறுத்தாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேவைப்படுவதால் வழக்கில் கோரும்பரிகாம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**